முரசொலி

2 அணா

ஆசிரியர்.. மு. கருணாநிதி

முரசு 1 | சென்னை 16 — 4 — 54 வெள்ளி | ஒலி 3

பன்னீர் செல்வம் பந்தலிலே!

அண்ணா பாராட்டிட,

"தஞ்சை மாவட்டம் சுயமரியாதை இயக்கத்தின் தொட்டில். செழிப்பும் வளமும் நிறைந்த மாவட்டம். செழிப்பு, வளம் என்று நான் குறிப்பிடுவது கழனிகளையும் சோலைகளையும் அல்ல! கடமையுணர்ச்சியோடு காரியமாற்றும் காளையர்களைத்தான் குறிப்பிடுகிறேன். இந்த மாவட்டம் பன்னீர் செல்வம் போன்ற பல செல்வங்களை நமக்குத் தந்திருக்கிறது." என்று பொதுச் செயலாளர் அண்ணா தஞ்சையில் நடைபெற்ற மாநாடுகளின் போது குறிப்பிட்டார்.

அழகிரியின் அரங்கில்!

நூறு—நூற்றி ஐம்பது என்று மக்களை விரல் விட்டு எண்ணக் கூடிய அளவுக்கு மாற்றுக் கட்சியினர் நடத்தும் மாபெரும் மாநாடுகள் மாறியிருக்கும் நேரத்தில் பதினாயிரக் கணக்கான மக்கள், வெள்ளம்போல் கூடிநின்று தஞ்சை பூமியிலே தி. மு. கழகத்தின் கொள்கைகீதத்தை உணச்சிப் பரவசத்தோடு இசைத்தனர். எதிர்ப்பு சக்திகளை அஞ்சசெய்தனர். ஏப்ரல் 10, 11, நாட்களிலே தஞ்சையின் வரலாற்றிலே புதியதோர்பொன்னேடு எழுதப்பட்டது என்று கூறத்தக்க விதத்தில் இரு பெரும் மாநாடுகள் நடைபெற்றன.

தெருவெல்லாம் திராவிடர் முழக்கம். நோக்கும் திசையெல்லாம் திராவிட விடுதலை கோரும் பட்டாளம். தாயகத்தின் எழுச்சியை எடுத்துக் காட்டும் விதத்திலே அமைக்கப்பட்ட அழகான பந்தல். அதன் முகப்பிலே மறைந்த செல்வத்தின் கம்பீரமான உருவப் படம்! அந்த வீர உருவைக்கண்டு மகிழ்ந்தபடி ஓடியாடிச் செயல் புரியும் ஆயிரமாயிரம் செல்வங்கள். அழகிரியின் பெயரால் அரங்கம். அந்த அரங்கிலே தி. மு. க. வின் முன்னணி வீரர்கள். அவர்களின் நடுவே திராவிடர்களின் வழிகாட்டி அறிஞர் அண்ணா.

மாநாடு துவங்கியது

இசைவாணரும், தமிழ்த் தென்றலுமான சிதம்பரம் ஜெயராம்அவர்களின் இன்னிசைமுழக்கத்தோடு துவங்கியது. பேராசிரியர் அன்பழகன் அவர்கள், பிறந்தகத்தின் பெருமை மிகு கலை, நாகரீகங்கள், குடியேறிய கொடியோர்களால் எவ்வண்ணம் அழிக்கப்பட்டது என்பது குறித்துப் பேசினர். சமுதாய சீர்திருத்த மாநாட்டை திறந்து வைத்தார். சமூக சீர்திருத்தம் அவசியமா என்போரின்கண்களையும் திறந்து வைத்தார். தோழர் பெத்தண்ணன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

தலைவர்

தோழர்கள் கே. கே. நீலமேகம், ஏ. கே. வேலன் வழிமொழிய தலைமை வகித்த கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் தலைமையுரை ஆற்றும் போது, புத்தரின் சின்னத்தையுடைய ஆட்சி, வாயளவில் புத்ததர்மம் பேசிக்கொண்டு, மதச் சார்பற்ற அரசாங்கம் என்று கூறிக்கொண்டு, மதக் காரியங்களுக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் முழு ஆதரவு கொடுத்து வருகிறது. மேல் சாதியினரின் சொகுசான வாழ்வை நிலைக்கச் செய்வதே, சமீபத்தில்வந்துள்ள கல்வித் திட்டத்தின் குறிக்கோளாகும், என்ற அருமையான கருத்துக்களை அமோகமான ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டினர்.

ஒரு நாள் வீழ்ச்சியுற்று தஞ்சை இன்று எழுச்சியுற்றிருப்பதை தி. மு. கழக மாநாடுகள் எடுத்துக் காட்டின. செந்நெற் களஞ்சியம், செங்கரும்புச் சோலை, என்று புகழப் படும் தஞ்சையில், உணவுக்கா தட்டு ஏற்பட்டு விடும்! அறுசுவை உண்டி —அதுவும் ஐந்து வேளைகள்!

மற்றும் விசேட அஞ்சல் நிலையம், தீ அணைக்கும் படை இன்னும் எத்தனையோ நல்லேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

'குறை இருந்தால் சொல்லுங்கள் — கேட்கிறோம்' என்று ஆடி ஓடிப் பணிபுரிந்த தொண்டர் படையினரின் சுறு சுறுப்பு பாராட்டிற்குரியது இத்தனையும் செய்த மாநாட்டு வரவேற்புக் குழுவினரை அனைவரும் வாழ்த்தினர்.

(விபரம் 4-5ம் பக்கம்)



Best copy available

பூகோள மேதையின் புராண போதை!

தெலுங்கர் இலக்கியமே பேசுகிறது; இனியும் திரையிடாதீர்!

இராவணன் யார்? இராமாயண காலத்தில் தென்னாட்டில் பரவியிருந்த வம்சம் எது? அவர்களின் கலாச்சாரம் என்ன? நாகரீகமும் பண்பாடும் எத்தகையது? என்பவைகள் குறித்து எண்ணற்ற சொற்போர்க் களங்களிலே வாதிட்டு நாம் வாகை சூடியிருந்தாலும், நமது குரல் கேட்காதவர்கள், கேட்டும் 'கேளாக் காதர்'களாக நடித்தவர்கள் இன்றும் ஏமாற்று வித்தை செய்கிறார்கள் — மாமேரு போன்ற வரலாற்றை மறைக்க முயலுகிறார்கள்.

தோழர் வி. பி. அதாவலே வடநாட்டின் தலைசிறந்த பூகோளகணிதப் பேராசிரியர்களில் ஒருவர் என்று புகழப்படுபவர். அவர் இம்மாதம் 10ம் தேதி சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் 'இராமாயண காலத்திற்கு முன்பு அரக்கர்களின் ஆதிக்கம் தென்னிந்தியாவில் ஓங்கியிருந்தது. அவர்களின் தலைமைக் கழகம் தான் இலங்கை'' என்று வாய் கூசாது கூறியிருக்கிறார்.

மேதைகள் என்பதற்காக அவர்களின் வாய் மொழிகளை அப்படியே நம்புவதற்கு தலையாட்டி பொம்மைகளல்லநாம். தென்னாட்டவர்களை — திராவிடர்களை — அரக்கர்கள்' என்று கூறிய தோழர் அதவாலே சாதாரணப் பேர்வழியாகவோ, சந்து முனைச் சிந்து பாடகராகவோ இருந்திருந்தால் நாம் கவலைப்படப் போவதில்லை. பூகோளப் பேராசிரியர், வரலாற்று மேதை சொல்கிறார் நாமெல்லாம் அரக்கர்களென்று— அதுவும் நம்முடைய மண்ணில்!

சரித நிபுணரின் இந்த செப்படி வித்தையை நாம் அம்பலப் படுத்த வேண்டாம்—தெலுங்கர் ஒருவரின் புரட்சி இலக்கியத்தை நம் சார்பாக கீழே வாதிடவிட்டிருக்கிறோம்.

○

நம் நாட்டில் ஆதி காலந் தொட்டு மதம் சரியான வழியில் கையாளப்படவில்லை. சொல்வது ஒன்று செய்வது ஒன்று, சாஸ்திரங்களிலே எழுதப்பட்டிருப்பது ஒன்று, அதை நடைமுறையில் நடத்திக்காட்ட கையாளும் வழி ஒன்று — இப்படிப் பல முறைகளினால் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றன. பாமரர் உள்ளங்களின் இந்தப் படுகொலைக்குக் காரணம் சமுதாயத்தின் புத்தி தீட்சண்யத்தை யெல்லாம் ஒரு 'சிறு கூட்டம்' கட்டுப் படுத்தி வைத்திருப்பதுதான். அந்தச் 'சிறு கூட்டம்' தன் சொந்த நலத்துக்காக, செய்யும் காரியங்கள் பகுத்தறிவை பாமரர்களிடமிருந்து விரட்டியது; விழிப்புணர்ச்சிக்கு வேலி போட்டது; மூட நம்பிக்கை, தாழ்வு மனப்பான்மை —இவைகளையெல்லாம் புகுத்தியது. அப்படிப்புகுத்தப்பட்ட மூட நம்பிக்கை நம் மக்களின் மனவளத்தைக் கெடுத்தபோதும் இரு பெரும் புரட்சிகள் இந்த சீர்கேடுகளுக்கெல்லாம் அணைபோட்டது. ஒன்று புத்தர் செய்த புரட்சி, மற்றது, மேலை நாட்டவர்கள் கொண்டு வந்த புரட்சி. துர் அதிர்ஷ்டம் பிடித்த இந்த நாட்டிலே புத்தரின் போதனைகள் எங்கும் விழிப்புணர்ச்சியை வீசியது. மனிதன் தன் மாட்சியை உணரத்துவங்கினன்.

> [ஆந்திரத்தைச் சேர்ந்த ஸ்ரீ பிரம்மா நந்தகிரி சுவாமிஜி என்பவரால் எழுதப்பட்ட 'சமுதாயப் புரட்சி' என்ற நூலின் முன்னுரைதான் கீழே தரப்படுகிறது. ஆந்திர நாட்டிலே சுயமரியாதை வீணை நம்மால் மீட்டப்படாவிட்டாலும் வேறு பலர் அந்தவேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதற்கு சான்று பகர்கிறது இந்தக் கட்டுரை. அங்கு, பார்ப்பனீய எதிர்ப்புப் பிரச்சாரத்தையும், திராவிட உணர்ச்சியையும் கவிராஜ திரிப்புரநேனி ராமசாமி சௌத்ரி (பார்—அட்—லா) என்பவர் துவக்கி வைத்திருப்பதாகக் கூறுகிறார் இந்தக் கட்டுரையாளர். நம்முடைய கொள்கையும், நோக்கமும் ஆந்திரத்திலும், மற்ற பிரதேசங்களிலும் பரவ முடியாது என்பவர்களுக்கும் தென்னாட்டவரை அரக்கர்கள் என்றுரைக்கும் 'மேதை'களுக்கும் தக்க சவுக்கடி இக்கட்டுரை :]

மேல் நாட்டவர் வருகை நமது ஊமை மனப்பான்மையைக் கிளறி "எப்படி? ஏன்?"– என்ற கேள்விகளைக் கேட்கத் தூண்டிற்று. நாம் கேள்வி கேட்கத் துவங்கிய போது எதையும் ஆராய்ந்து அறிந்து கொள்ளவும் தலைப்பட்டோம்.

மறுபடியும் மதவாதிகள் படையைமோதினார்கள். பௌத்தம் 'இந்திய மடமை'யின் ஒரு மூலைக்கு ஒதுக்கித் தள்ளப்பட்டது. அந்த மதவாதிகள் வரலாற்றைக் கொஞ்சம் ஆராய்வோம்.

வட துருவத்திலிருந்து வந்த ஆரியர்கள் 'தேவர்கள்' என்று அழைக்கப்பட்டார்கள். இமயமலையின் தெற்கிலும், விந்திய மலையின் வடக்கிலும் அவர்கள் பரவினார்கள். ஆதிவாசிகளான திராவிடர்கள் தோற்கடிக்கப்பட்டு தென்கோடிக்குத் துரத்தப்பட்டார்கள். குளிர்ப்பிரதேசங்களில் வசித்துப் பழக்கப்பட்டதால் ஆரியர்கள் மாரிக் காலங்களில் நெருப்பை மூட்டி குளிர் காய்வது வழக்கம். அப்படிக் குளிர் காயும்போது அன்று அவர்கள் பேசிய சோம்பேறிப் பேச்சுகள், பின்னர் பெரியோர்கள் வசனமாக—புராணங்களாக நம்மீது திணிக்கப்பட்டன. அந்த நெருப்பைச் சுற்றி அவர்கள் உணவருந்தினார்கள். 'நெருப்புக் கடவுளு'க்கு மாட்டிறைச்சியையும் மற்றவைகளையும் படைத்தார்கள். அப்படிக் குளிர் காய்வதற்காக ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட நெருப்புச் சாதனம் பிற்காலத்தில் ஹோமகுண்டமாக்கப்பட்டு அதற்கு தெய்வீகத் தன்மையும் ஊட்டப்பட்டது. நாட்கள் செல்லச் செல்ல, அந்த நாடுமாறிகள் கடவுளின் தூதுவர்களாக மதிக்கப்பட்டார்கள். அவர்கள் இட்டது சட்டமாயிற்று.

தோற்ற திராவிடர்கள் வெற்றி கொண்ட ஆரியரின் அடிவருடிகளாகி அடிமைத் தொழிலைஅன்புச் சேவையாக மதித்தனர். இதற்குத் தகுந்த உதாரணம் ஒரு ஆரிய ராஜகுமாரனின் அடிவருடிக்கொண்டு உட்கார்ந்திருப்பதாகச் சித்தரிக்கப்படும் குரங்குக் கடவுளான அனுமார்தான்! ஆரிய ஆதிக்கத்துக்கு எப்படி திராவிடர்கள் அடிபணிந்துவாழ்ந்தார்கள் என்பதற்கு இந்த மானம் பறி போகும் சித்திரம் ஒரு அத்தாட்சி.

தோற்கடிக்கப்பட்ட திராவிடர்கள் தெற்கிலே நுழைந்து காடுகளையும் மலைகளையும் சூழ்நிலையாக்கிக் கொண்டு அங்கே இருந்த தங்கள் சகோதர சாம்ராஜ்யங்களோடு தொடர்பு கொண்டு வாழ்ந்தார்கள். அவர்கள் வாழ்வு வீர வாழ்வு; அவர்கள் வீரத்தை வழிபட்டார்கள். அவர்களோடு அவர்கள் கலையும் கலாச்சாரமும் வளர்ந்தது. இந்த நிலையில் ஆரியர்கள் தெற்கு நோக்கி இன்னும் வருவதை அவசிய மற்றதாகக் கருதினர். விந்தியத்தைக் கடந்தவர்கள் ஆரியரல்லாதாராக மதிக்கப்பட்டனர். இந்த உண்மையைத்தான் அந்தக் காலத்துக் கதைகள் சொல்லுகின்றன.

நாட்கள் வளர வளர ஆரியர்களின் ஜனத்தொகையும் பெருகலாயிற்று. தெற்கே திராவிடர்கள் காடுகளைத் திருத்தி கழனியாக்கினர். இந்தச்சமயம்பார்த்து ஆரியர்கள் கொஞ்சம் கொஞ்சமாக தெற்கிலே நுழையத் துவங்கினர். அவர்கள் தங்களுக்குள்ளே சிறந்த ராஜ தந்திரியான அகஸ்தியரை தெற்கிலுள்ள ஐந்து திராவிடப் பேரரசுகளுக்கு அனுப்பி வைத்து அவன் மூலம் சில ரகசிய அரசியல் விஷயங்களை அன்னிய ஆரிய ராஜ்யங்களுக்கு அவ்வப்போது அனுப்ப ஏற்பாடுகள் செய்தனர். அகஸ்தியன் ஏழு கடலைக் குடித்ததாக கதைகள் எழுப்பப்பட்டன. இன்னொரு கதைகூட உண்டு; அதாவது விந்திய மலை (ராஜாக்கள்) மேலும் மேலும் உயர வளர ஆரம்பித்ததாகவும், வளர்ந்து அவைகள் ஆகாயத்தை முட்டியதாகவும் அதனால் தேவர்கள் துன்புறுத்தப்பட உடனே தேவர்கள் ஆண்டவனிடம் முறையிட, ஆண்டவன் அகஸ்தியனைத்தேர்ந்தெடுத்து அனுப்ப, அகஸ்தியனைக் கண்டதும் அந்த மலை (ராஜாக்கள்) அடிபணிந்ததாக அந்தக் கதை சொல்லுகிறது.

மலைகள் வளர்ந்த கதையையும் கடல் நீரையெல்லாம் ஒரு குள்ளன் குடித்த கதையையும் நம்மவர்கள் நகைப்புக்குஇடந்தராமல் நம்பினார்கள். அந்த அளவுக்கு மக்கள் சிந்தனை அடகு போயிருந்தது!

கொஞ்ச நாட்களில் அகஸ்தியனின் புண்ணிய யாத்திரை திராவிட நாட்டை ஆரியர்களுக்கு அடிமைப் படுத்தியது. ஆரியர்களோடு அவர்கள் பழக்கமானகள்குடியும், மாமிச உணவும் இங்கு குடியேறியது. அவர்களுடைய பழக்க வழக்கங்கள் எல்லாம் எழுதப்படாத சாஸ்

7-ம் பக்கம் பார்க்க

தலையங்கம்

சென்னை (16—4—54) வெள்ளி

காலையோ!---மாலையோ!

தோற்றவர்களையும் துரோகிகளையும் இணைத்துக் கொண்டு காமரஜரின் புதிய மந்திரிசபை உதயமாகி விட்டது. காமராஜரின் கோஷ்டியினர் ஆச்சாரியார் மந்திரி சபையில் இருந்த எந்தெந்த அமைச்சர்களைப் பற்றி கண்டனக் கணைகளைப்பொழிந்தார்களோ அந்த மந்திரிகள் எல்லாம் இப்போதும் நாற்காலிகளில் ஒட்டிக் கொண்டு விட்டார்கள். காமராஜரை எதிர்த்து நின்று முறியடிக்கப் பட்ட தோழர் சுப்ரமணியம், மீண்டும் மந்திரியாகிவிட்டார். சுப்பிரமணியத்தின் பெயரை முன்மொழிந்த பக்தவத்சலமும் மந்திரியாகி விட்டார். முதன் மந்திரியாகப் பதவி ஏற்றாலும் சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற முயற்சிப்பேன் — அதுவே முறையானது — என்று ஜனநாயகக் குரல் எழுப்புகிற காமராஜர், தேர்தலில் படுதோல்வி யடைந்து, மக்களால் வெறுக்கப் பட்டு மறைந்து போன பக்தவத்சலனாரை பதவியில் அமர்த்தி யிருப்பது எத்தகைய ஜனநாயகத் தத்துவமோ நாமறியோம். மாணிக்க வேலரைப் பற்றித்தான் கேட்க வேண்டியதில்லை. மந்திரி பதவி என்று ஒன்று இருந்தால் போதும். அவர் விசித்திரமான தியாகியாகி விடுவார். எந்தக் கொள்கையையும் விட்டுக் கொடுப்பார். காமராஜரின் மந்திரி சபையில் தோழர் எஸ். எஸ். ராமசாமிக்கும் ஒரு பதவி கிடைத்திருக்கிறது. பல நாள் படாதபாடு பட்டு—நடையாய் நடந்து—கடைசியில் பதவிக்கனியைப் பெற்று விட்டார் பரிதாபத்திற்குரிய உழைப்பாளர் கட்சித் தலைவர். இவர்கள் மந்திரியாக வருவதிலே நமக்குக் கவலையில்லை. காங்கிரசிலே சேருவதாலும் நமக்கு வருத்தமில்லை. இந்த தியாக உள்ளமும், தேசீய உணர்ச்சியும், காங்கிரஸ் பக்தியும், தேர்தல் நேரத்திலேயே இவர்களுக்கு வராமல் போய் விட்டதே என்று எண்ணும் போதுதான் பரிதாபமாயிருக்கிறது

காங்கிரஸ் பெயரைச் சொல்லிக்கொண்டு வெளியே போனால் கேலி பேசி விரட்டுவார்கள் என்று பயந்து கொண்டு கோழிக் கொடி பறக்க விடுவானேன்—கொள்கையில் சூரராக்கும் என்று எண்ணிக் கொண்டு மக்கள் ஏமாறட்டும் என்று எதிர்பார்ப்பானேன்—தேர்தலில் வென்றதும் பதவி யெனும் தேங்காய்த் துண்டு எங்கேயாவது வீசி யெறியப்படுகிறதா என்று தேடித் தேடி அலைவானேன்— அலைந்ததுதான் மிச்சம், ஆச்சாரியார் ஏமாற்றிவிட்டார் என அழுது, அதை மறைக்கப் புதிய அறிக்கைகள் விடுவானேன்—இப்போது கதரணிகிறேன், காங்கிரசில் இணைகிறேன் கைகொடுப்பீர் காமராசரே! கட்சியையும் கலைத்து விடுகிறேன் என்று ஓடுவானேன்—எல்லாம் பதவி வேட்டை! பச்சைப் பதவி வேட்டை!

தலைவருக்கு மந்திரி பதவி வந்தால், கட்சியைக் கலைத்து விடுவது! உழைப்பாளர் கட்சி உதயமானதே, ஒரு ராமசாமி படையாச்சியாருக்கு மந்திரி பதவி வாங்கித் தரத்தானா? கட்சியைக் கலைப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியமாகவா போய் விட்டது! வீரமும் தீரமும் தனக்கெனத் தனிச் செல்வாக்கும் இருப்பது உண்மையானால் அப்போதே—இடது சாரிக் கட்சிகளின் உதவியை நாடாமல் பலப் பரிட்சை பார்த்திருக்கலாமே தோழர் ராமசாமியார்!

"காங்கிரஸ் ஒரு சர்வாதிகார இயக்கம், வடநாட்டுச் சுரண்டல் இயந்திரம். திராவிடப் பெருங்குடி மக்களின் வாழ்வை வாட்டிடும் கூடாரம். தென்னவரை, இலங்கைக்கும், மலேயாவுக்கும் விரட்டியடித்து அங்கே அவர்கள் விடும் கண்ணீரைப் பன்னீராக மதிக்கும் பாதக் டில்லித்துரைத் தனத்தின் பாசறை" என்றெல்லாம் பேசியவர்தான் இன்று காங்கிரசிலே சேருகிறார். மந்திரியாக மாறுகிறார். அவர் பேசிய பேச்சுக்களுக்குப் பதில் கிடைத்து விட்டதா? அவர் சாட்டிய குற்றச்சாட்டுக்களை காங்கிரஸ் மண்டபம் ஏற்றுக் கொண்டு பரிகாரம் தேடுவதாக வாக்களித்து விட்டதா? டில்லி ஏகாதி பத்யப் பிடியிலிருந்து திராவிடம் விடுபடட்டும் என்று அவர் சாரப் போகும் காங்கிரஸ் மகா சபை அறிவித்து விட்டதா?

அந்தோ! அநியாயம்! அநியாயம்! ஜனநாயகம் என்ற சிசுவைத் துடிக்கத் துடிக்கக் கொல்லும் அநியாயம்! பெற்ற தாயைக் கொல்லலாம்—தந்தையையும் கொன்று விடலாம் — பெண்டு பிள்ளைகளையும் கொன்றுவிடலாம்—மக்கள் மன்றம் காட்டிய மரியாதை இருக்கிறதே; அதை—அந்த மக்கள் கூட்டத்திற்குத் தெரிவிக்க வேண்டிய நன்றி இருக்கிறதே, அதை—கொன்று குவிப்பதைவிட பெரும் பாதகம்—அளவிட முடியாத துரோகம் —வேறு எதுவுமே இருக்க முடியாது!—தீரர்கள் உலவும் தென்னாற்காடு மாவட்டமே! உன்னால் இந்தக் கொடுமையைத் தாங்கிக் கொள்ள முடியாது தான். 'நன்றிக்கு' இலக்கணம் தரும் திருக்குறள் உலவும் தென்னாற்காட்டு பூமியே! உன்னால் இந்த வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியாதுதான். வெற்றி நமது பக்கம் வரவேண்டும் என்பதற்காக அல்லும் பகலும் உழைத்து, கடைசியில் படு கொலை செய்யப் பட்ட இளம் வீரன் மஜீதே! நீ உயிரோடிருந்து இந்த அக்ரமத்தைக் காணக் கூடாதென்றுதான் செத்துப் போய் விட்டாயோ; செல்வமே! நீ செத்து விட்டாய்! ஆனால் நீ சிந்திய ரத்தம் வீண் போகவில்லை—வீண் போகாது! அது விபீஷணர்களை விட்டும் வைக்காது! ஏழிரண்டு பதினாலு உலகு உள்ளவரை; கடல் உள்ளவரை, கதிரோன் உள்ள வரை, "இந்தா விபீஷணா இலங்காபுரி ராஜ்யம்!" என்று இராமன் அருள் தந்தானமே—அந்த விபீஷண ராஜ்யமே இப்போது இருக்குமிடம் தெரிய வில்லை—இந்த வீண் மனோராஜ்யங்கள்தானா நிலைக்கப் போகின்றன? நிரந்தரமாய் ஆளலாம் என்று நினைத்த ஆச்சாரியாரையே சொந்தக் கட்சி சுருட்டிப் போட்டு விட்டது பழம்பாயைப் போல, ஒரு மூலையில்!

பதவி கிடைத்தால் போதும் எனப் பல் காட்டுபவர்களுக்கு மட்டும் சிரஞ்சீவி"ப்பட்டம் கொடுத்து சீராட்டவா போகிறது; சீறிக்கிளம்பும் ஜனசக்தி!

தாலிகட்டிக் கொண்டாள், கணவன் தந்த உணவினால் தசையை வளர்த்துக்கொண்டாள். உணவு, உடை, உறையுள் மட்டு மின்றி அவள் உற்சாகமாக வாழ்வதற்கேற்ற வசதிகள் அத்தனையும் கணவனால் அளிக்கப் பட்டது. கண்ணுக்கு மை வேண்டு மென்பாள்—மறுக்க மாட்டான் மணாளன். காதுக்கு வைரத்தோடு, என இதழ் அசைப்பாள்—உடனே கம்மல் ஜொலிக்கும்! சேலை என்பாள்—வேறென்ன எனக்கு வேலை; இதோ வாங்கிக்கொள் என்பான். இத்தனை பிரியமுள்ள பிராண நாதன்—அவனால் வாழ்கின்ற வனிதாமணி—வாழ்வுக்கேற்ற வசதிகள் அனைத்தும் பெற்றுக்கொண்ட பின்னர் ஒரு நாள்—அடுத்த வீட்டுப் பலகணியை எட்டிப் பார்த்தாள். பக்கத்து வீட்டுக்காரன் ஒரு பூனைக் குட்டியைக் கொஞ்சிக் கொண்டிருந்தான். அழகான பூனை. அது போல ஒரு பூனை வேண்டுமென்று அவள் தன் அத்தானிடம் பல முறை கேட்டாள்—அத்தானோ, "பூனை வேண்டாம்—அது திருடும்" என்று கூறி விட்டான். "எலி பிடிக்க தேவை" என்றாள். 'பொறி' வாங்கி வருகிறேன் என்றான். அவளுக்கோ பூனையின் மிருதுவான ரோமங்களைத் தடவிப் பார்க்க, அதோடு கொஞ்சிட அளவிலா ஆசை. அதற்காகவே பக்கத்து வீட்டுக் காரனிடம் பனிப் பார்வை வீசினாள். கனிச் சொற்கள் பேசினாள். கணவன் வாங்கித் தந்த கண்மை அதை தீட்டிக்கொண்ட கண்களால் அடுத்த வீட்டானுக்கு தொடுத்தாள் பாணம்! அத்தான் போட்ட வைரத்தோடு—அந்த ஜொலிப்போடு தன் சிரிப்பையும் சேர்த்து பூனை குட்டிக்காரனுக்கு போதை வழங்கினாள். கேவலம்—அவளுக்குத் தேவையானது ஒரு பூனைக்குட்டி! அதற்காகத் தன்னையே அவனுக்கு அடிமையாக்கினாள். அவன் இவளை அணைத்தான். ஆனந்த முற்றான். கொஞ்சினான். குலவினான். அவளுக்கோ பூனைக்குட்டிக் கிடைத்துவிட்டது. கற்பிழந்தபெண் என்று யார் கூறினாலும் கவலையில்லை அவளுக்கு—கருப்புப் பூனைக்குட்டிக்கு சொந்தக்காரி என்ற பெயர் வருமே; அது போதும் அவளுக்கு!

ஊரார் கணவனைப் பார்த்தனர். கணவன் உறுமினான். இவளுடன் போய் நீ வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டாயே என்று ஊரார் வருத்தப்பட்டனர்.

குடும்பத்தை நடத்த எண்ணிய நாங்கள் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டது தவறா? அவள் பாஞ்சாலியாக மாறிவிட்டால் நான் என்ன செய்வது; ஒப்பந்தம் ஒன்று இருந்தது போலவே—'ரத்து' என்றும் ஒன்று இருக்கிறதே—என்று கணவன் பதில் சொன்னான். பூனைக் குட்டிக்காக ஒருவனிடம் போனவள்—நாளை, யானைக் குட்டிக்காக எத்தனை பேரிடம் ஓடுவாளோ என்று ஊர் பேசிக் கொண்டது.

காமராசரின் மந்திரி சபை அமைந்துள்ள இந்த நேரத்திலே, நேர்மையற்றோரின் போக்கைக் காணும் நமக்கு மேலே குறிப்பிட்ட கதை தான் நினைவுக்கு வருகிறது.

பூனை விரும்பும் பூவைக்கு, மக்களின் துரோகிகளை ஒப்பிட்டுப் பாருங்கள். காதகியை மணந்த கணவன் உள்ளத்தோடு பொது மக்கள் உள்ளத்தை ஒப்பிட்டுப் பாருங்கள்.

கதை சரிதானா இல்லையா? இந்தக் கதைகள் அரசியல் வானிலே நடைபெறலாமா? நடை பெறத்தான் விடலாமா? என்ற கேள்விகளுக்கு சரியான பதில் கிடைக்கும். அப்படிக் கிடைக்கும் பதில் இருக்கிறதே; அந்தப் பதிலின் ஜுவாலைக்கு முன்னே எந்த சூராதி சூரனும் சுருண்டு விழாமல் இருந்ததில்லை!

போகட்டும்; ஆசைப் பட்டார்கள் அமைச்சு கட்டில் ஏற! ஏறட்டும்! ஆனால் அவர்கள் ஆயுட் காலத்திலேயே இப்படி ஒரு முறைதான் வாய்ப்பு கிடைக்கும்! அந்த இடைக்காலத்தை, இரண்டோர் ஆண்டு மந்திரிச் சுவையை அனுபவித்து மகிழட்டும்! மக்கள் முன்னே நிற்க முடியாமல் வாழ்நாள் எல்லாம் அழப் போகிறவர்களுக்கு இப்படியாவது ஒரு அற்ப மகிழ்ச்சி இருக்கக் கூடாதா?

இப்படிப்பட்டோரெல்லாம் இடம் பெறும் காமராசரின் மந்திரி சபை ஆரம்பமாகிவிட்டது! உதயத்தின் சிகப்பு வர்ணமா? அல்லது அஸ்த மனத்தின் செந்நிறமா? என்பது புரியாமலிருக்கிறது நமக்கு! ஏனெனில் காலை மாலை இரண்டும் ஒரே மாதிரிதான் காட்சியாகிறது—காமராசர் அமைச்சர் குழுவும் அப்படித்தான் காட்சி தருகிறது.

★ ★ ★ செல்வம் திருநகரி

அழகிரி பெயர்

சிங்காரப் பண் இசைக்கிறார் சிதம்பரம் ஜெயராம்

நாவலர் நெடுஞ்செழியன்

தலைவர் முன்னுரைக்குப் பின் கடவுள் என்னும் பொருள் பற்றி அவர் உரையாற்றும்போது உதிர்ந்த கருத்துக்களின் உயர்வை எண்ணி எண்ணி இதய வாழ்த்து பாடாதார் யாருமில்லை. "தான் படைத்த உலகம் உருண்டையா தட்டையா என்றே தெரியாத கடவுளும் ஒரு கடவுளா?" என்று அவர் கேட்டபோது மாநாட்டுப் பந்தலே அதிர்ந்தது! ஆமாம்—பிறந்த குழந்தை ஆணா பெண்ணா என்று பெற்றோருக்குத் தெரியாவிட்டால் குழந்தையைப் பெற்றது யார் என்ற சந்

தமிழ்த் தென்றல் வீசுகிறது; பேராசிரியர் சமூக மாநாட்டைத் திறந்து வைத்தார்.

தேகம் ஏற்படத்தானே செய்யும்!

"மானை வேட்டையாடு புலியே! தேரையை விழுங்கு பாம்பே!" என்று ஆண்டவன் கூறுகிறாராம். அது அவரது திருவிளையாடலாம். குன்றக் குடியார் கூறுகிறார் இந்தக் கொடுமையை திருவிளையாடல் என்று! குன்றக் குடியார்—மானாகவோ, தேரையாகவோ இருந்தால் புலி பாயும் போது அல்லது பாம்பு சீறும் போது இது ஆண்டவன் திருவிளையாடல் என்று கூறுவாரா?" இப்படி நெடுஞ்செழியன் கேட்கும்போது மக்கள் கடல் மகிழ்ச்சிப் பெருக்கால் ஒலி முழக்கம் செய்தது.

..ட மன்றக் கொள்கை வீரர் ..விந்தசாமி, சமுதாய சீர்..த்த மாநாட்டில் தலைமைச் சங்கநாதம் செய்கிறார்.

பிற்பகல் நிகழ்ச்சி

மூவலூர் மூதாட்டியார் ராமாமிர்தத் தம்மையார் புலவர் ஏ. கே. வேலன் மாநாட்டுப் பணியில் பெரும் பங்கேற்ற என். எஸ் இளங்கோ, "தம்பி ஆசிரியர் தில்லை-வில்லாளன் விருதை வீரர் 'தனியரசு' ஆசிரியர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, "நம் நாடு" பொறுப்பாளர் பொன்னம்பலனார், அறிஞர் அண்ணா ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

நாடகம்.

இரவு நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள் அண்ணாவின் ஓவியமாம் 'காதல் ஜோதி' நாடகத்தைத் தனது குழுவினருடன் நடித்தார்.

இரண்டாம் நாள்

இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக அரசியல் மாநாடு துவங்கிற்று வரவேற்புக் கழகத் தலைவரும் தஞ்சை மாவட்டப் பெருப் பணியாளருமான தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

திறப்புரை ஆற்றிய தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் கழகத்தின் வளர்ச்சி பற்றியும், கழகத்தை நெருங்கும் நண்பர்கள் வேடத்துப் பகைவர்கள் பற்றியும், அருமையான ஒரு படம் வரைந்து காட்டினார். அப்பப்பா; அவரது வெண்கலக் குரலிலிருந்து கிளம்பிய வீர உரைகள் எத்தனை எத்தனை அரசியல் கருத்துக்களை மக்கள் மன்றத்திற்குத் தந்தன தெரியுமா?

திறப்பு விழாவிற்குப் பின்னர் தோழர் சுப்பிரமணியம், மாயூரம் பழனிசாமி, என். எஸ், இளங்கோ ஆகியோர் வழி மொழிய தோழர் என். வி. நடராசன் தலைமை ஏற்றார்.

திராவிட இயக்கத்துக்கும் நடராசன் என்ற பெயருக்கும் மிக மிகப் பொருத்தம், சுயமரியாதைச் சுடர் மாயவரம் நடராசன்—சுந்தரத் தமிழ்காத்து உயிர் நீத்த தாலமுத்து நடராசன்—கல்லக்குடி போரில் ஆவி தந்த லால்குடி நடராசன்—இப்படிப்பல நடராசன்கள் நமது இயக்கத்தில் அழியா ஓவியமாகி விட்டனர். அவர்கள் போன்ற துணிவும், திறனும் படைத்தவர் தான் இந்த நடராசனும் என்று தலைவரைப் பாராட்டிப் பேசிய தோழர் கருணாநிதி குறிப்பிட்டார்.

நடராசன் அவர்களின் உணர்ச்சி மிக்க தலைமையுரை கழகக் காளையருக்கு போர்க்கருவியாக அமைந்தது. அதற்குப் பின்னர் சிந்தனை சிற்பி சிற்றரசு அவர்கள் பேச எழுந்தார். மக்கள் பெரு வெள்ளம் அவரது தீப் பொறி கக்கும் சொற்களையும் —தித்திக்கும் செந்தமிழையும் பெருவிருந்தாக ஏற்று மகிழ்ந்தது.

பிற்பகல் நிகழ்ச்சி

தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. சட்டமன்ற உறுப்பினர்களான சுயம்பிரகாசம், சுப்பிரமணியம், வேலு, கரூர் ரத்தினம், சம்மந்தம், கோவிந்தசாமி, ஆகியோர் சொற் பொழிவாற்றினர். பின்னர், கருணாநிதி, நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோர் பேசியபின் பொதுச் செயலாளர் அண்ணா அவர்களின் அறிவுரை ஆரம்பமாகியது.

இரவு நாடகம்

நடிப்புப் புலவர் கே. ஆர். ஆர். குழுவினரால் 'ஓர் இரவு' நாடகம் நடை பெற்றது.

தஞ்சையில் சீரும் சிறப்புடன் மாநாடு நடத்திய தோழர்கள் அனைவரும், குறிப்பாக வரவேற்புக்குழுத்தலைவர் நீலமேகம், செயலாளர்பதி, பொருளாளர் பெத்தண்ணன், விளம்பர உறுப்பினர் நடராசன் தொண்டர் படைத்தலைவர் அடைக்கலம் ஆகியோரும் மாவட்டச் செல்வம் இளங்கோவும் திராவிடத்தின் பாராட்டுக் குரியவர்களாவார்கள். வாழ்க அவர்களின் தொண்டு!

அறிவு மழை

ஆச்சாரியார்!—காமராசர்!

கல்லூரியிலே நான் மாணவ..
யிருக்கும் போது ஆச்சாரிய..
தலைமையில் பேசினேன். ஆல..
பிரவேசத்துக்கு ஆகமங்க..
ஆதாரம் இருக்கிறதா என்ற பி..
சினையிலே விவாதம் நடை..
றது. நான் பேசினேன்—"ஆக..
தில் ஆதாரம் தேடுவது அ..
மற்றது—மான் வாழ்வது ப..
புலியிடம் கேட்கலாமா?"
எனக் கேட்டேன். ஆச்சாரி..
என்னை வற்புறுத்தி உட்கா..
சொன்னார். மீண்டும் ..
டேன்; "ஆச்சாரியார் திருக்..
ரியை திருமணம் செய்துகொ..
தாரே, அதற்கு ஆகம ஆதா..
உண்டா" என்று! ஆச்சாரி..
என்மீது சீறி விழுந்தார். அ..
அளவு நேரில் காணும், அறி..
மாகும் வாய்ப்புக்கூட எனக்..
காமராசருக்கும் கிடைய..
காமராசர்வருகையானது; ம..
போனார் மனிதர் வந்தார் ..
அளவுக்கு சிறு மகிழ்ச்சி ..
கூடியதே தவிர, வந்த ம..
நன்மை செய்வாரா தீமை ..
வாரா என்பது வந்த ம..
ருக்கே தெரியாது!

எங்கே போனீர்?

எம்மை முதல் எதிரி எ..
குறிப்பிட்ட ஆச்சாரியா..
எங்கே போய் விட்டீர்? ..
களத்திலே நிற்கிறான்; நீர் எ..
போனீர்? ஏன், ஓடி விட்..
எம்மைப்பற்றி நீர் பேசிய ..
தூறுப் பேச்சுக்கள் அனைத்..
ஆண்டவனைப் பற்றி நீர் பே..
அருள் வழிப்பிரசங்கம் அ..
தும் மக்களால் துச்ச..
மதிக்கப்பட்டது என்பதுதா..
உமது ஓட்டத்தின் பொரு..

கழக நண்பர்கட்கு!

தி. மு. கழகத் தோழர்க..
காமராசர் மந்திரிசபை அ..
தது பற்றி அவசரப்பட்டு ..
முடிவுக்கும் யாரும் வரக்கூட..
நாடகத்திலே வரும் க..
மாற்றத்தை ரசிப்பது பே..
தான் சில அரசியல் மாற்றங்..
கவனிக்க வேண்டும். தி. மு..
கம் எதைப்பற்றி தன் யோ..
யைத் தெரிவிப்பதானாலும் ..
சரப்பட்டு தெரிவிக்காது. அ..
அவசரப்படுவது அரசியல் க..
முமல்ல!

சயல்வீரர் கூடினர்! ★ ★ ★

அறிவுப் பண்பாடினர்!

புதிய கருத்துக்கள் ஆயிரம் கூறி ஞர் அரசியல் மாநாட்டுத் திறப்பா ளர் அருமைமிகு நண்பர் சம்பத்.

; ஆம், அண்ணு பேசுகிருர்!

●

ஞ்சையில் 10, 11 நாட்களில் நடைபெற்ற க. அரசியல், சமுதாய மாநாடுகளில் ை வழங்கிய பொன் மொழிகளின் ப்பு]

!

ஒரு பருவ மங்கை. கிரதையாக நடந்து ண்டும். சிரித்தால், ார்த்து சிரிக்கிருள் க ள். அழுதால், நினைத்து கலங்குகி கள் — மௌனமா ால், 'முசுடு' பிடித் ர்கள் — பலகணிப் த்தால், பாதையில் ாகிருன்? என்பார் மங்கைக்குள்ள அத் ங்களும் தி. மு. க. டு. அதை தி. மு. ர்களும் முன்னணி னைவில் வைத்துக்

ரச்சினைகளைப் பற்றி முடிவுக்கு வருவதில் ரதைய்யாயிருக்க

பம் என்று நாம் பார்ப்பனர் என்று றுவதும் ஒன்று ரியாரே சொல்லப் ாருங்கள், "பார்ப் என்ருல் எதைச் — ஆரிய ஜாதி விட்டொழிக்காத சாரியைத்தானே வகளை விட்டொ தனை அல்ல நான் ான்னது!" என்று ால்லத்தான் போகி

விரட்டப்படுவதா, விரட்டப்படுவதா ன பற்றி யோசிக்க ள் பார்ப்பனர் தி. மு. கழகத்தின ல! பெரியாருக்கு பார்ப்பனரிடம் பிருந்ததில்லே.

இப்போதுமில்லே. "ஒலி குண்டு" என ஒரு குண்டு உண்டு. அது யாரையும் கொல்லாது—எதை யும் அழிக்காது; ஆனுல் எதி ரியை மிரண்டோடச் செய்யும். அத்தகைய அற்புதமான குண் டைத்தான் என் தலைவர் பெரி யார் ராமசாமி இப்போது வீசி யிருக்கிருர். பெரியார் அந்த குண்டை வீசட்டும்! அப் போதுதான் பார்ப்பனர் அபயம் கோரி நம்மிடம் ஓடிவருவர். "வாருமய்யா வாரும்! பூணூலேக் சுழற்றும்! புராணங்களை தீயிலே போடும்! புது மனிதராகும்! புகலிடம் தருகிருேம்" என்று நாமும் அவர்களை நல்வழிக்குத் திருப்ப முடியும். ஆகவே பெரி யார் அவர்க்ள் நன்ருக வெளுத் துக் கட்டட்டும். ஆரியர் அபயம் கோரி நம்மிடம் ஓடிவரட்டும். அவர்களை மனிதர்களாக்கி நம் முடன் சேர்த்துக் கொள்வோம்.

தாக்குவர்; தாங்கிக் கொள்வோம்!

அண்ணுதுரையை அவதூரு கப் பேசினர், நெடுஞ்செழியனை ஏசினர், சம்பத்தைக் குறைகூறி னர், கருணுநிதியை கண்டபடி திட்டினர்—என்றெல்லாம் எனக்கு செய்திகள் வருகின்றன. நம்மை இழிவாகப் பேசுவதால் நம் கொள்கைகள் அழிந்து விடாது!

"யார் ஏசினுலும் கவலேப் படாதே" என்று எனக்குபாடம் சொன்னவர் பெரியார்தான்! நான் அப்படி கவலேப்படாமல் இப்போதும் இருக்கிறேனு என்று குரு என்ற முறையிலே அவர் என்னை சோதித்துப்பார்க் கிருர் அவ்வளவுதான்! நாற்பது வயது வரையில் நாட்டிலே கிளம் பும் எதிர்ப்புக் கூச்சல்களையெல் லாம் ஒருவன் தாங்கிக்கொண் டால், பிறகு அவனுக்கு எதையும் தாங்கும் சக்தி ஏற்படும் என்று பெரியார் ஒருமுறை என்னிடம் கூறியிருக்கிருர். துஷ்டசகவாசத் தால் அவர் அதை மறந்திருக்க லாம். ஆனுல் அவர் பாதத்தின் கீழே பல ஆண்டுகள் அமர்ந்து பாடங்கேட்ட இந்த அண்ணுத் துரை அதை மறந்து விடவில்லே.

மூன்று செல்வம்

கண்ணீர் —வியர்வை—ரத்தம்— இந்த மூன்று பெரும் செல்வங் களைப் பெற்றவர்கள் தி. மு. கழ கத்தினர். கண்ணீரில் பிறந்தோம் வியர்வையால் வளர்ந்தோம். ரத்த மளித்து விடுதலை வீரர் எனப் பாராட்டப் படுகிறேம். கண்ணீர் வியர்வை, ரத்தம்—மூன்றின் விலேயைக் குறைவாக மதிப்பவர் கள் குறை கூறட்டும் அதுபற்றி நமக்குக் கவலேயில்லே,

தி. மு. க. லட்சியம்!

எத்தகைய அரசியல் மாறுதல் களும், அரசியல் புயல்களும், தி.மு.க. துவங்கியிருக்கும் நாயக விடுதலேக் கிளர்ச்சியைத் தடுத்து நிறுத்திவிடாது! தி. மு. க. வின் லட்சிய கீதம், இகபர முரசு—திரா விட நாட்டு விடுதலேதான்!

நாம் பெறப் போகும் திரா விடத்தில் சமத்துவம் தழைக்கும். சமுதாய மறுமலர்ச்சிசெழிக்கும். உணவு, உடை, உறையுள் முக் கியமாக கவனிக்கப்படும். இதோ மேடையில் அமர்ந்துள்ள தோழர் சாமியப்பாவின்மைந் தர் ராமலிங்கத்தின் கணக்கற்ற நிலமும், முத்தமிழ் வள்ளல்அரு ளானந்தசாமி நாடாரின் பெரு வாரியான நிலமும், இவர்கள் போன்ற பெரு நிலமுடையோர் களின் நிலமும் திராவிட நாட்டு தேசிய சொத்தாக மதிக்கப்பட்டு திராவிட சர்க்கார் கூட்டுப் பண்ணை மூலமாக பயிர் செய்யப் பட்டு, விளைந்த நெல் மணிகளை மக்கள் அனைவருக்கும் பகிர்ந்த ளிக்கப்படும்.

ஒத்துழைப்போம் வாரீர்!

உண்மையான பொதுவுடைமை பூங்காவாக திராவிடம் காட்சி தர திராவிடர் அனைவரும் ஒத்து ழைக்கப் புறப்படுங்கள். நாயக விடுதலையே நமது லட்சியம்! நாயகத்தின் மேன்மையே நமக்கு உயிர், மூச்சு, பேச்சு! எல்லாம்!

• அரசியல் மாநாட்டில் தலைமையுரை இடியோ! புயலோ!! என முழங்கு கிருர்; என். வி. என்.

மு. க. வின் தொடர் கதை

?



பம்பர மெனச் சுற்றிப் பணியாற்றிய செயற் குழுத் தலைவர்கள். வ. வே. கழ கத்தலைவர் நீலமேகம், விளம்பர உறுப் பினர் நடராசன், செயலாளர் பதி பொருளாளர் பெத்தண்ணன், தொண் டர் படைத் தலைவர் அடைக்கலம்

Filmed as bound

பாலைவன ரோஜா

[கருணாநிதி]

"நாம் வெறும் மாணவர்கள் மட்டுமல்ல—எதிர்கால உலகத்தின் சிற்பிகள்!"—இப்படி பத்து மாணவர்களைப் பார்க்கும் போதெல்லாம் கந்தையா சபதம் போட்டுச் சொல்வான்—சிரித்துக்கொண்டே சொல்வான்—இதை மற்றவர்களுக்கு நினைவுபடுத்த வேண்டியதுதான் அவன் பிறவிப் பயனாகக் கருதியவன் போல் சொல்லிக் கொண்டே இருப்பான்!

எங்கள் கல்லூரி ஒரு பல சரக்கு மண்டி—யார் எதை எதிர்பார்த்து வருகிறார்களோ அது தப்பாமல் கிடைக்கும். காதல் வேண்டுமா?—தோகை மயிலாளின் ஜாடையை நோக்கி படையெடுக்கும் ஒரு இளைஞர் பட்டாளம்! பாதையை மறிக்காமல் "வாழட்டும்" என்ற பெரும் உபதேசத்தோடு ஒதுங்கி விடுவார்கள் மற்றவர்கள்! அறிவு வேண்டுமா?—அதோ இருக்கிறது நூல் நிலையம். புத்தகங்களைக் கட்டி அழுதபடியே இருக்கலாம்...... அரட்டை அடிக்க வேண்டுமா?—ஒரு மணி நேரமா அல்லது நாள் முழுவதுமா?"—என்று கேட்டபடி ஒரு கூட்டம் வரும்! மற்றும் மேட்டினி காட்சி ரசிகர்கள்—சீட்டுக் கச்சேரி வித்துவான்கள் இந்த ரகத்தினர் ஏராளம்! ஏராளம்!!

அந்த வகுப்பின் கடைசி 'டெஸ்கி'லே வசிஷ்ட மண்டலமென ஒரு சில நட்சத்திரங்கள் ஒளிவிட்டுக் கொண்டிருந்தன. அதிலே வட்டமிடும் நிலவாகத் திகழ்ந்தான் கந்தையா.

"வாழ்க்கையிலே ஒரு லட்சியம் வேண்டும்" என்று பெர்னட்ஷாவைப்போல உபதேசம் செய்வான். இங்கர்சாலை நம் கண் முன்னே கொண்டுவந்து நிறுத்துவான்.

"நாம் அதிர்ஷ்டசாலிகள்! புதிய திராவிடத்தை நாம்தான் மலர்விக்கவேண்டும். நிலவானிலே அடக்குமுறை இருள் கவ்வியிருக்கிறது. அதோ தேன் அருந்த நம் எதிர்கால சந்ததிகளாம் தும்பிகள் துதிபாடி நிற்கின்றன. வெள்ளி நிலவே! திராவிடப் பெருந்துடி மக்களே! நீங்கள்தான் எழ வேண்டும்...... நாளையே திராவிடம் மலர்ந்து விடும்...' இப்படி அழகு நடைபோடும் கவிதை மணிகளை கந்தையா அள்ளி அள்ளி வீசுவான். அவன் மேடை யேறினால் புராணக் கொள்கைகள் பாடை யேறுமே என்று அஞ்சும், பண்டிதர் கூட்டம்!

அவன் மட்டுமென்ன, அவனிடம் ஒரு படையே இருந்தது. வகுப்பின் கடைசி பெஞ்சிலே கடைசிப் பையன் கண்ணையன். "பாரதிதாசன் பரம்பரையிலே இவன் மூத்தவன்"—என்று அவனைப்பற்றி கந்தையா விருது அளித்திருந்தான்.

அவன் பக்கத்திலே உட்கார்ந்திருப்பவன் ராமு—அந்தக் கல்லூரியிலேயே சென்ஸ்டினின் தியரியைப்பற்றி நன்றாகத் தெரிந்தவன் அவன். அவனுக்குக்காக ஒரு முதல் வகுப்பு தேர்விலே, காத்திருந்தது. இங்கிலாந்து சென்று படித்து ஒரு 'புரொபஸர்' ஆக வேண்டுமென்பது அவன் கனவு!

மற்றவன் ஒரு பாடகன்-தென்னாட்டு இசையை "மாடர்னைஸ்" செய்ய வேண்டும் என்று முணுமுணுத்துக்கொண்டே இருப்பான்!

இந்த வருங்கால மேதைகளுக்கெல்லாம் கொள்கை வடிவம் கொடுத்து வளர்த்து வந்தான் கந்தையா—என்னமோ வருங்கால திராவிட நாட்டில் அவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு இலாகா கொடுப்பதைப் போல! இந்த 'கந்தையா குழு'வினரால் தனது கல்லூரிக்கு மாபெரும் புகழ் வரப் போகிறது என்று நினைத்தார் கல்லூரித் தலைவர்! ஆசிரியர்கள் அவர்களிடம் அன்பு காட்டாவிட்டாலும் அவர்களுடைய 'எதிர்காலத்'திடம் மரியாதை செலுத்தினர்......

அகில உலகமும் புகழும் அரசியல் மேதை—விஞ்ஞான வித்தகன்—ஓவிய நிபுணன்—இசை வல்லுனன்—இப்படி பலவித கோணங்களில் காட்சி தந்தது அவர்கள் எதிர் காலம்.

●

பாவம்! சூதாட்டம் போலன்றி மாசுமருவன்றித் துவங்கிய அந்த எதிர்காலம் ஏக்க காலமாகவும் என்பதை அவர்கள் மாணவப் பருவம் உணர்த்தவே இல்லை.

சந்தர்ப்பம் ஒரு சதிராடும் சூன்யக்காரி, பொங்கிவரும் வாலிபம் இருக்க—'உம்' என்ற மாத்திரத்தில் பகைவரை சங்காரம் செய்யும் திறனிருக்க—அவனை யெல்லாம் விட்டுவிட்டுச் செல்வச் செழிப்பிலே ஆழ்ந்து அழுகிப்போன பிணந்தின்று மாலை சூட்டும் மாயாக்காரி அவள். அந்தச் சந்தர்ப்பத்தின் தனிப்பிடியிலே ஏழை கந்தையாக்கள் எப்படி மாட்ட முடியும்?

●

இப்படி யெல்லாம் நினைப்பலைகளுடன், ஓடும் ரயிலில் 'டிக்கெட் பரிசீலனை' என்றபடி நகர்ந்துகொண்டிருந்தேன் நான்! அந்த ஆள் மௌனமாக சிந்தனையை எங்கோ ஏவ விட்டுக்கொண்டிருந்தான். "சரிதான்......மாட்டிக் கொண்டான் ஒருவன்" என்று நினைத்தபடி அவனை அதட்டினேன். அவன் திரும்பினான். "என்னைத் தெரிகிறதா சார்! நான்தான் சார் உங்களோடு கல்லூரியில் படித்த கந்தையா!" என்றான்.

என்னால் நம்ப முடியவில்லை. கந்தையா எங்காவது வெளிநாடுகளிலே மேல் படிப்புக்காகச் சென்றிருப்பான்—உலகப் போற்றும் அறிஞனாகத் திகழ்வான் என்று நினைத்துக், கொண்டிருக்கும் நான் சாதாரண கந்தல் அணிந்த கந்தையாவை நினைத்துப் பார்க்க முடியவில்லை!

"என்னப்பா கந்தையா! உன்னோடு சேர்ந்த கூட்டாளிகளெல்லாம் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? முதல் வகுப்பு வாங்கிய ராமுவுக்கு அமெரிக்கா செல்ல "ஸ்காலர்ஷிப்" கிடைத்து விட்டதா? கவிஞர் கண்ணையன் ஏதோ தமிழ் ஆராய்ச்சி செய்யப் போவதாக சொல்லிக் கொண்டிருப்பானே, என்று ஆர்வ மிகுதியால் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனேன்.

"ஆமாம்! கந்தையா—முதல் தரமான பேச்சாளி—எதிர்காலத்தில் நல்ல அரசியல் வாதியாக வருவான் என்று எதிர்பார்த்தீர்கள்.

ராமு ஒரு கணித மேதை! கண்ணையன் ஒரு கவிஞன்! சுந்தரம் ஒரு சங்கீத ரத்தினம்! கோபாலன் சிறுவனாக இருக்கும் போதே பறக்கும் விமானம் செய்த ஆராய்ச்சிக்காரன்...... அவர்கள் எல்லோருமே இப்போது குமாஸ்தாக்கள்...என்று சொல்லியபடி கோவென்று அழுது விட்டான்.

"இதோ பார்த்தாயா" என்று என்னிடம் பத்திரிகையில் வந்த ஒரு போட்டோவைக் காண்பித்தான்! "அடே! இவன் பிச்சுமணி யாச்சே! மேடையிலே நீ கேட்கிற கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் தவிப்பானே இவனுக்கு என்னப்பா இப்போ? என்றேன்.

"அவன் சாதாரண பிச்சுமணியல்ல இப்போது—அவன் அப்பா ஒரு மாஜி கலெக்டர்—அவன் அத்திம்பேர் டெல்லி செகரெட்டேரியேட்டில் இருக்கிறார். அவன் மாப்பிள்ளை மந்திரிக்கு உறவு...இப்போது அவன் ஐ.நா. சபைக்கு போகிறான், நம் நாட்டுப் பிரதிநிதியாக!"—ஆவேசத்தோடு பேசிக் கொண்டே போனான்! வண்டி ஸ்டேஷனில் நின்றது. "நான் போய் வருகிறேன் கந்தையா" என்று சொல்லி விட்டு நான் வண்டியை விட்டு இறங்கினேன்!

"சார்! அதைப் படியுங்கள்" என்று சுவற்றிலே ஒட்டியிருந்த போஸ்டரைக் காண்பித்தான், கந்தையா; நான் படித்தேன்.

"சுதந்திர இந்தியக் குடியரசு மக்களாகிய நாம், பேச்சுரிமை, எழுத்துரிமை, வழிபாட்டு உரிமை, அபிப்பிராயம் வெளியிடும் உரிமை, ஆகிய இவைகளோடுபிரஜைகள் எல்லோருக்கும் சரிசமமாக சந்தர்ப்பம் முதலியவற்றை வழங்க நாம் உறுதிப் படுத்துகிறோம்."

படித்து முடித்தேன். எல்லோருக்கும் சரிசமமாக சந்தர்ப்பம் வழங்கும் இந்திய அரசியல் சட்டம் என்னைப்பார்த்து எள்ளி நகையாடியது!

"கல்லூரியிலே படிக்கும் போது கந்தையா ஒரு பிரசங்க பீரங்கி! ராமு ஒரு கணித மேதை! கண்ணையன் ஒரு கவி தாசிரோன்மணி! சுந்தரம் ஒரு சங்கீத ரத்தினம்! கோபாலன் வகுப்பறைக்குச் செல்லாமலேயே கற்றுத் தேர்ந்த இஞ்சினீயர்! இப்போது அவர்கள் எல்லோரும் குமாஸ்தாக்கள்!

தொட்டாற் சுருங்கியைப் போல் கந்தையாவின் சொற்போருக்குப் பதில் சொல்ல முடியாமல் மேடையிலே குன்றிப் போய் நிற்கும் பிச்சுமணி இப்போது அமெரிக்காவிலே குன்றென உலவுகிறான். அவனைவென்றவனாகிய கந்தையா, டிக்கெட் இல்லாமல்பிரயாணம் செய்யும் நிலை! தென்றல் தூக்கிவரும் ரோஜாவின் மணம்—கருப்பு வண்டினை கனக மயமாக்கும் அதன் மகரந்தப் பொடி....அழுகி நாற்றமெடுத்த சொந்த நாட்டில் பரிமளகந்தம் வீசச் செய்ய வேண்டிய அந்த நந்தவன ரோஜா வெண்மணற் பரப்பிலே—கண் பார்வைக்கு எட்டாத பாலைவனத்திலே கருகிக்கொண்டிருக்கிறது! பகை ஒழிக்கும் வாளாக வார்க்கப் படவேண்டிய அந்த எஃகுக் கம்பி வறுமை ஈரமும்—பட்டினி நீரும் பட்டு துருப்பிடிக்கிறது! அதோ அங்கே திறமை சிறிதுமில்லா பிச்சுமணி சுற்றியிருப்போர் தயவால் உயர ஏறிப் போகிறான். இந்த ரோஜாக்களைப் பிழிந்து அந்த வெள்ளெருக்கை மலருக்கு சிகப்பு வர்ணம் பூசுகிறார்கள்.

நான் மாணவனாக இருக்கும் போதெல்லாம் எனக்கு கந்தையாவின் கொள்கை பிடிக்காது. இருந்தும் இந்த காட்சியை நினைத்த என் இருதயம் கண்ணீர் விட்டது.

"அழு! மாசு படிந்த திராவிடமே! அழு! கறுத்துப்போன மேகம்—சோகத்தால் கனத்துப்போன உள்ளம்—இவைகளுக்கு மாற்று கண்—நீர்தான்! அந்த கண்ணீர் ஓடையில்தான் புதிய சமுதாயத்தின் விடுதலைப் படகு மிதந்திட வேண்டும்"—என்று உரக்கச் சிரித்துக் கொண்டே சொன்னான் கந்தையா! சொல்லிக்கொண்டே அழுதான்! அந்த அழுகுரலோடு வண்டி நகர்ந்தது!

••

ஒப்புக்கொள்கிறார்!

○

"இந்தியாவில் ஒரே ஒருகலாச்சாரத்திற்குத்தான் இடம் இருக்க வேண்டுமென்பது தவறு. இந்தியாவிலுள்ள மைனாரிட்டிகள்தாங்கள் பந்தோபஸ்தான நிலையில் இருப்பதாக உணர்வு கொள்ளும் நிலைமை இருக்க வேண்டும்.

நேரு பண்டிதர்

பவநகர் 10-4-54

பூகோள மேதையின்....!

2-ம் பக்கத் தொடர்ச்சி

திரங்களாக அவர்கள் சந்ததிகளுக்குக் கற்பிக்கப்பட்டன. ஆரியர்கள் தங்கள் தலைமுறையைக் காப்பதற்காக புத்திர சந்தானம் இல்லாதவனுக்கு 'புத்' என்றபீதியையும் பரப்பினர். இப்படியாக பரம்பரைவளர்ச்சிகெடாதவாறு சம்பிரதாயங்கள்பாதுகாக்கப்பட்டன.

வேதம் ஓதுபவர்கள் பிராமணர்கள்—போர் வீரர்கள் க்ஷத்திரியர்கள்—வாணிபம் செய்பவர்கள் வைசியர்கள்—இப்படி மூன்று வகுப்புகள் தோன்றின. ஆரிய சமூகம் இயங்க இந்த மூன்று வகுப்புகள் மட்டும் போதுமா? நிச்சயம் போதாது. இந்தப் பிரிவினை திராவிடர்களை வெற்றி கண்ட பின் ஏற்பட்டதால் ஒரு நான்காவது வகுப்பும் அவசியமாயிற்று, ஆரிய சமூகம் சரியாக வேலை செய்ய!. அந்த நான்காவது வகுப்புதான் வேலை செய்யும் அடிமை சமூகம்—திருடன், தேவடியாள் மகன், அழுமூஞ்சி முகம் உள்ளவன் என்ற பொருள் படும்படி அழைக்கப்பட்ட 'தாசர்கள்' 'தாஸ்யூக்கள்' 'சூத்ரர்கள்' என்கிற திராவிடர்கள்! இந்த 'சூத்ரர்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது; உல்லாச வாழ்க்கை அனுமதிக்கப்படவில்லை. எந்த திராவிடனும் சொத்து வைத்திருக்கக்கூடாது. எந்த திராவிடனும் ஆரியப்பெண்களை திருமணம் செய்துகொள்ள முடியாது; ஆனல் எந்த ஆரியனும் இஷ்டப்பட்டால்திராவிடப் பெண்களை மணக்கலாம். மேலும் அந்தக் கால வழக்கப்படி மணப்பெண்ணின் பாவங்களை நாசம் செய்வதற்காக முதல் சாந்தி முகூர்த்தம் செய்வதுகூட ஆரியப் புரோகிதர்கள்தான்!

இப்போது நாம் மதிக்கும் சாஸ்திரங்களெல்லாம் நம்முடைய கலாச் சாரத்துக்கு முற்றிலும் புறம்பான ஆரிய சாஸ்திரங்களே! அந்த ஆரியர்கள் மக்களை நான்கு ஜாதிகளாக மட்டும் பிரிக்கவில்லை; 'ஆண் உயர்வு 'பெண் தாழ்வு' என்ற மனப்பான்மையையும் வளர்த்தனர். பெண் ஆணுக்கு அடிமை யாக்கப்பட்டாள்-

இந்தச் சமூகச்சகதியிடையேதான் புத்தொளி பரப்ப புத்தர் தோன்றினர். சாஸ்திரங்கள் என்ற பெயரால் ஒரு சிறு கூட்டத்தினரால் செய்யப்படும் அக்ரமங்களை எதிர்த்தார். வேதங்களை, உபநிஷதங்களை சாடினர்சாதிப்பாகுபாட்டை புறக்கணித்து சமத்துவத்தை உபதேசித்தார். மனிதன் கடவுளைக் கட்டாயம் வணங்கித்தான் ஆகவேண்டுமென்ற நியதியில்லை என்று துணிந்து கூறினர். நல்லொழுக்கம் — உயிர்களிடத்து அன்பு – இவையே புத்தர் போதித்த பிரதானக் கொள்கைகள். புத்த மதத்தினல் நாளடைவில் பார்ப்பனீயம் சவக்குழி நோக்கிப் பிரயாண மாகியது.

பின்னுக்குத் தள்ளப் பட்ட பார்ப்பனீயச் சிலந்திக் கூட்டிலிருந்து சில்லிட்டுப் போன சவத்திற்கு புத்துயிர் அளிக்க பல "மகான்கள்" முன்வந்தனர். அவர்களில் முக்கியமானவர் குமாரலி பட்டர் என்பவர்! நேர் முகத் தாக்குதலினல் பௌத்தத்தை வெற்றிகாண முடியாது என்று கண்டுகொண்ட குமாரலி பட்டர், தந்திரமான தாக்குதல் முறைகளைக் கையாளத் துவங்கினர். நாளாக ஆக சுதவனு என்ற அரசனை தன் வசப்படுத்திக் கொண்டு அவன் மூலம் தனக்கு ஏராளமான சிஷ்யர்களையும் ஏற்படுத்திக் கொண்டார். இருந்தபோதும் பௌத்தர்களின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாது தன்னையே 'ஆண்டவனுக்கு அர்ப்பணித்து' —அதாவது தீக்குளித்து மரித்தார்.

அப்படி தீக்குளிக்கும் போது குமாரலி பட்டர் சங்கராச்சாரியாரை அருகில் அழைத்து, "மீண்டும் பார்ப்பனீயத்தை நிலைநாட்ட முடியாமல் நான் சாகிறேன். நான் மேற் கொண்ட புண்ணிய கைங்கரியத்தை நீ மேற் கொண்டு பார்ப்பனீயத்தை பரப்புவாயாக!" என்று சொல்லி உயிர் துறந்தார்.

பின்னர் சங்கராச்சாரியார் மண்டன மிஸ்ரா என்பவரின் துணை கொண்டு தன் லட்சியத்தை நிலை நாட்ட புறப்பட்டார். லட்சியம் என்ன தெரியுமா? பிரம்ம சூத்திரங்கள், உபநிஷதங்கள் -- இவைகளின் பெயரால் பழைய ஜாதிப் பாகுபாட்டை யாரும் மீற முடியாத கட்டுப் பாடுகளுடன் பார்ப்பனீயச் சவத்துக்கு புத்துயிர் கொடுப்பதுதான். இவருடைய தந்திரத்தினல் பௌத்தம் தலை சாய்ந்தது. இதே சங்கராச்சாரியார் பின்னெரு சமயம் ஜாதிகள் ஒழிக்கப்பட வேண்டுமென்று சமத்துவப் பிரச்சாரம் செய்யத் துவங்கியபோது அங்கு கூடியிருந்த மக்கள் அவரைக் கல்லாலடித்து கொலை செய்ய முன்ருர்கள். சங்கராச்சாரியாரைத் தொடர்ந்து பார்ப்பனீயத்துக்கு புத்துயிரளிக்க வித்யாரண்யர், ராமானுஜர், மாதவர் முதலியோர் தோன்றினர். பௌத்தம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. பார்ப்பனீயம் மீண்டும் எதிர்ப்புச் சக்திகள் ஏதுமின்றி கொடி உயர்த்தி வாழ்ந்தது.

பின்னர் நம் நாட்டில் நுழைந்த இஸ்லாமும், கிறிஸ்துவமும் ஜனநாயக மதங்கள்— சமத்துவத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பவைகள். இவ்வுலக இன்பத்தை அடிப்படையாக வைத்து எழுப்பப்பட்ட மேலை நாட்டவர்கள் வாழ்வு நம்மவர்களைக் கவர்ந்தது. இந்த நேரத்தில் வங்காளத்தில் ராஜாராம் மோகன்ராய் என்பவர் தோன்றி ஜாதிப் பாகுபாட்டையும், வேத சாஸ்திரங்களையும் தாக்கினர். அவரைத் தொடர்ந்து தயாநந்த சுவாமி உயிர்ப்பலியை எதிர்த்தார். ஆனல் ஜாதிப்பாகுபாடுகள் சமுதாயத்திற்கு இன்றியமையாதவை என்றுவாதித்தார்.

பின்னர்தான் காந்தியார் தன்னுடைய சமுதாயப் போலி சீர்திருத்தங் களுடன் அவதாரம் எடுத்தார். ஜாதிப்பாகு பாடுகளையும்— வருண பேதங்களையும் முழு மனத்துடன் ஆதரித்தார். காந்தியார் "புரட்சிக்காரர்" என்று புகழப் படுகிருர்.

அவருடைய சமுதாயக் கொள்கைகளை ஆராய்பவர்கள் காந்தியார் "சங்கராச்சாரியாரின் இரண்டாவது பதிப்பு" என்ற முடிவுக்குத்தான் வருவார்கள் என்பது திண்ணம்!

சமுதாய சீர்திருத்தச் செம்பரிதியாக ஆந்திர நாட்டில் கவிராஜ் திரிபுரநேனி ராமசாமி சௌத்ரி, (பார்..அட்-லா) தோன்ருர். புத்தமதக் கொள்கைகளுக்குப் புதுமெருகு தந்து, பார்ப்பனீயக் காட்டு மிராண்டித்தனத்தின் கொடுங்கோன்மையை எதிர்த்து, திராவிட உணர்ச்சியின் மறு பிறப்பிற்காக அரும்பாடு பட்டார்.

●

மேல் நாட்டவர் வரவால் நம்முடைய பழம் பெருமையும் — பழைய சித்தாத்தங்களும் அழிந்து விட்டதாக பெரிதும் பேசப் படுகிறது. மேலை நாட்டவரின் எண்ணங்களையும் – பழக்க வழக்கங்களையும் அப்படியே விழுங்கி விடுவதல்ல, நம்முடைய முன்னேற்றத்திற்கு மருந்து! கிழக்கத்திய சித்தாந்தத்திலுள்ள வேறு உலகத்தைப் பற்றிய சிந்தனையை அகற்றி விட்டு – ஒரு தனிப்பட்ட இனத்தினரின் சுயநலத்துக்காக இந்த நாள் வரை செய்யப் பட்டிருக்கும் தந்திர ஏற்பாடுகளை தகர்த்தெறிவதுதான் நாம் நம்முடைய சமுதாய முன்னேற்றத்திற்கு செய்யவேண்டியமுதற்கடமை.

இருதார மணத்தடை-அமுலாகும் இருவிதம்



இலக்கிய உலகிலே
இளவேனிற் காலம்

இலக்கிய உலகிலே இதுவரை இருந்த இலையுதிர் காலம் மாறுகிறது. இனிமேல் துவங்க இருப்பது இளவேனிற்காலம். அதிலே மலரும் பூக்களை தொடுத்துக் கொடுப்பதே நமது வேலை—அதுதான் "பூமாலை"

'பூமாலை'

ஆசிரியர் : தில்லைவில்லாளன்

இலக்கிய மாத வெளியீடு

ராயல் 1–8 100 பக்கங்கள் ○ விலை எட்டு அணு

ஆண்டு சந்தா 6—0—0 அரையாண்டு 3—0—0

இதழுக்கு 8 அணு கட்டும் விற்பனையாளர் தேவை

பூமாலை அலுவலகம்
சிதம்பரம்

கடைசிப்பக்கம்

(?) காரை, புதுவை, முதலிய இடங்கள் பிரஞ்சு ஆதிக்கத்திலேயே இருக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் யார்?

காரையையும் புதுவையையும் தீர்த்தத் திருத்தலங்களாக மதிக்கும் 'குடி' மக்கள்!

(?) காமராசர் மந்திரிசபை அமைப்பது மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம்தானா?

காமராசர் மந்திரிசபை அமைப்பது வட நாட்டாருக்கும், ஆரியருக்கும் கசப்பான செய்தி என்றால், எங்களுக்கு அது இனிப்பான செய்திதான்!

(?) திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்குமுள்ள வேறுபாடு என்ன?

முன்னேற்றக் கழகம் என்பதற்கு, முன்னுள்ள சொல்லும், கம்யூனிஸ்ட் கட்சி என்பதற்கு முன்னுள்ள சொல்லுந்தான் வேறுபாட்டின் அடிப்படையாகும்.

(?) திராவிடநாடு பிரிந்தால் பாதுகாப்புக்கு என்ன செய்வீர்கள்?

திராவிட நாடு கேட்பதே ஒழுங்கான பாதுகாப்புக் காகத்தான்!

(?) என் முதல் எதிரி கம்யூனிஸ்டுகள்—அவர்களையே அடக்கி விட்டேன், இப்போது என் முதல் எதிரி தி. மு. க, அதையும் கணக்கு தீர்த்து விடுவேன் என்று ஆச்சாரியார் சொன்னார் அல்லவா?

ஆமாம், சொன்னார் — அப்போதே நாம் பதில் கூறியிருக்கிறோம், மாகினாட் அரணைத் தகர்த்த இட்லர் மாஸ்கோவில் அடிவைக்கும் போது இப்படித் தான் சொன்னான்—அது போலவே, கம்யூனிஸ்ட் மாகினாட் அரணை வென்று விட்ட ஆச்சாரியார் தி. மு. க. மாஸ்கோவிடம் நெருங்குகிறார் என்று எச்சரித்தோம், எச்சரிக்கையின் விளைவை மிக விரைவிலேயே கண்டு விட்டோம்.

(?) ஆச்சாரியாரின் அடுத்தடுத்த அரசியல் தொடர்புகள் எப்படியிருக்கும்?

அது எப்படியிருக்குமோ நமக்குக் கவலையில்லை; நாம் திராவிட நாடு பெற்று, பாராளும் நமது மக்கள் மன்றத்தின் கட்டிடத்திற்கு "பெரியார் மாளிகை" எனப் பெயர் வைத்துள்ளோம் என அறிவித்ததும், "அப்படியா! அந்த மாளிகையை நான் திறந்துவைக்கிறேன்" என்று முதல் விண்ணப்பம் போடுகிறவர் ஆச்சாரியாராகத்தான் இருக்க முடியும். அதுவரையில் இன்னும் சில ஆண்டுகளாவது அவர் உயிரோடிருக்க வாழ்த்துவோமாக! ஃ

கோப்பையைக் கவிழ்க்காதீர்! கோட்சேக்கள் வேண்டாம்!

மதத்தை அபினுக்கு ஒப்பிட்டார்கள் மக்கள் தலைவர்கள். துர்நாற்றம் வீசும் அந்த மதச் சாக்கடை துரோகத்தின் விளை நிலம் என்பதை வரலாறு மெய்ப்பித்துக் காட்டியது.

சந்திரகுப்தன் காலத்து சாணக்கியன் முதல் காந்தியார் காலத்து கோட்சேவரை சரித்தத்தை கறை படுத்திப் போன துரோகிகள் அனைவருமே மதப் பித்தர்கள்தான்.

சென்றவாரம் 'சுதேசமித்திரன்' சீனிவாசன் தலைமையில் கூடிய கூட்டத்தில் பேசுகையில் பகவன்தாஸ் கூறியிருக்கிறார், "மதம் அவசியம். பள்ளிகளில் மத போதனை செய்ய வேண்டும் அதற்கான செலவை சர்க்காரே ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று. சாணக்கியரைப் போன்றவர்கள் இன்னும் தேவைப் படுகிறது நாட்டிற்கு, கோட்சே கும்பல் வளரவேண்டியது அவசியம்; என்பதைச், சொல்லாமல் சொல்லுகிறாரா பகவன்தாஸ் என்று கூட எண்ணத் தோன்றுகிறது நம் போன்றோருக்கு! நச்சுக் கோப்பையைக் கவிழ்த்து விட்டுப் பார்த்து அதிலிருந்தாவது நாலு கோட்சேக்கள் முளைப்பார்களா என்ற நப்பாசை போலும் அந்த வடநாட்டுக் கோமானுக்கு! ஃ

'சோமு' அச்சகத்தில் அச்சிடப்பட்டு, தியாகராச சுந்தரம் அவர்களால் வெளியிடப்பட்டது. ஆசிரியர் மு. கருணாநிதி. ஜக்ரியா காலனி, கோடம்பாக்கம், சென்னை—24.